

# தெளிவு 03

## ஆசிரியர் கருத்து

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பேரருளால் "தெளிவு - இதழ் 03" தற்போது உங்கள் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கின்றது. தொடர்ந்தும் இது பந்நூறு இதழ்களாக மலர்ந்து மணம் வீசுவதற்கு உங்கள் ஒத்துழைப்பைக் கோருகின்றோம்.

தூய இஸ்லாமிய மார்க்கம் இன்று பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, நாளாந்தம் விதவிதமான புதுப்புது பத்வாக்கள் வெளியாகிக் கொண்டிருப்பதனால், "எது சத்தியம்?" என அறியாது மக்கள் தடுமாறிக் கொண்டிருக்கும் நிலையில்,

நபி (ஸல்) அவர்களினால் நன்மாராயங் கூறப்பட்ட "ஜமாஅதுல் முஸ்லிமீன்" தோன்றி, எவ்வித கூட்டல் குறைத்தலுமின்றி தீனை மக்கள் முன் சரியாக சமர்ப்பிக்க முன்வந்தமை பல இதயங்களுக்கு ஆறுதலையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தியிருப்பதை எமது வெளியீடுகளுக்கு கிடைத்திருக்கும் அங்கீகாரம் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

எமது "தெளிவு" எனும் இவ்வெளியீடுகள், வாசித்து விட்டு "பேப்பர் கடை"களுக்கு அனுப்பப்படும் ஏனைய புத்தகங்களைப் போன்றவையல்ல. மாறாக, எக்காலமும் பயன்பெறுவதற்காக பத்திரப்படுத்தி வைக்க வேண்டிய பொக்கிஷம் என்பதை வாசகர்கள் மறந்து விடக்கூடாது.

பெயருக்காகவோ புகழுக்காகவோ, உலக ஆதாயத்திற்காகவோ அல்லாது அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைப் பெறுவதை மாத்திரமே நோக்காகக் கொண்டு இத்தெளிவு இதழ்கள் வெளியிடப்படுகின்றன.

எனவே தொடர்ச்சியாக இந்த இதழ்களை நீங்கள் வாசித்து வந்தால், இஸ்லாத்தின் தூய வடிவம் உங்களுக்குத் தெளிவாவது மாத்திரமன்றி, அல்லாஹ் நாடினால் அனைத்துப் பிரிவுகளையும் விட்டு ஒதுங்கி தூய மார்க்கத்தின்பால் நீங்கள் திசை திரும்புவதற்கும் இது காரணமாகி விடலாம் என்பதையும் உங்களுக்கு முன்னறிவிப்புச் செய்ய விரும்புகின்றோம்.

யா அல்லாஹ்! உலக மக்கள் அனைவரும் உனது நேர்வழியின்பால் திரும்ப வேண்டும் என்ற எமது பேராசையை பணிவுடன் உன்னிடம் சமர்ப்பித்து விடைபெறுகிறோம்.

- ஆசிரியர் -

# கேள்வி-பதில்

### கேள்வி : 01

### கேள்வி பதில் என்ற அமைப்பு குர்ஆன் ஹதீஸில் கூறப்பட்டுள்ளதா?

### பதில் :

மார்க்க விடயத்தில் ஒருவருக்கு தெளிவு தேவை ஏற்படின் அவர் அத்தெளிவை தெரிந்தவர்களிடத்தில் கேட்டு தெளிவு பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அல்ஹ்வே அல்குர்ஆனில் கட்டளை பிறப்பித்துள்ளான். ஆகவே நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் அறிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.
( அல்குர்ஆன் - 16 : 43 )

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :
“குர்ஆனிலுள்ளவைகளைக் கொண்டு அமல் செய்யுங்கள் அதில் தெரியாதவைகளை அதன் ஆலிமிடத்தில் கொண்டு செல்லுங்கள்.”
(அபூதாவூத் தரம் ஸஹீஹ் - புலூகுல் அமானி பா.18 பக்கம். 39

### கேள்வி : 02

### “தெளிவு” சஞ்சிகையின் முதலாம் வெளியீட்டில் தஸ்பீஹ் தொழுகைப்பற்றிய ஹதீஸ் சஹீஹானது. எனவே தஸ்பீஹ் தொழுகை தொழலாம் என்று எழுதப்பட்டிருந்தது. ஆனால் சில உலமாக்கள் அந்த ஹதீஸ் பலயீனமானது என்றும் தஸ்பீஹ் தொழுகை பித்அத் என்றும் கூறுகின்றனர். இதன் விளக்கம் என்ன?

### பதில்:

தஸ்பீஹ் தொழுகை சம்பந்தப்பட்ட ஹதீஸ் அபூதாவூத் இப்னுமாஜா, ஹாகீம் போன்ற கிரந்தங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஹதீஸை பதிவு செய்த இமாம்கள் எவரும் இது "லயீப் - பலயீனமானது" என்று கூறவில்லை. அல்பானி என்பவர் இந்த ஹதீஸ் ஸஹீஹானது. இதற்கு பல க்ஷாஹிதுகள் (பக்கபலங்கள்) இருக்கின்றன என்று கூறுகின்றார்.
( மிக்ஷ்காத் பா.01 பக்.419 பார்க்கவும் )

ஆகவே இந்த ஹதீஸ் பலயீனம் என்று கூறுபவர்கள் சரியான சான்றுகளை முன்வைத்து இது பலயீனமானது என்று நிரூபிக்க வேண்டும். இல்லாத பட்சத்தில் இந்த ஹதீஸைக் கொண்டு அமல் செய்ய வேண்டும் என்பதே ஹதீஸ் கலையின் முடிவாகும். எனவே தஸ்பீஹ் தொழுகை சம்பந்தமாக வந்துள்ள ஹதீஸ் பலயீனமானது என்று கூறுபவர்களிடம் அதற்கான ஆதாரங்களை எடுத்து தயவு செய்து எங்களுக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

**கேள்வி : 03**

**சிலருக்கு காய்ச்சல் போன்ற நோய்கள் ஏற்பட்டால் " இந்த நாசமாய்ப் போன காய்ச்சல் என்னை விட்டு தொலையமாட்டுதே!" என்று அந்த காய்ச்சலை திட்டுகின்றார்கள். இது பற்றி இஸ்லாம் என்ன கூறுகின்றது?**

**பதில் :**

பொதுவாக நோய் ஒரு விசுவாசிக்கு அல்லாஹ்விடம் இருந்து கிடைக்கும் அருளாகும். ஏனெனில் நோய் ஏற்பட்டு அவர் பொறுமையாக இருந்தால் அவரின் பாவங்கள் அனைத்தும் துடைக்கப்பட்டு விடும் என்று இஸ்லாம் கூறுகின்றது. எனவே எந்த நோயையும் திட்டக்கூடாது. இஸ்லாம் அதை தடுத்துள்ளது.

"நோய்வாய்ப்பட்டிருந்த உம்மு ஸ்ஸாயிப் என்ற ஒரு பெண்மணியை நபி (ஸல்) அவர்கள் சந்திக்கச் சென்றார்கள். அவர்களைக் கண்டு "என்ன நடுங்குகின்றீர்கள்?" என்று கேட்க, "(எனக்கு) காய்ச்சல். அல்லாஹ் அதற்கு பரக்கத் செய்யாமல் இருக்கட்டும்" என்று கூறினார். உடனே நபி (ஸல்) அவர்கள் " காய்ச்சலைத் திட்டாதீர்கள். நிச்சயமாக அது இரும்பின் கறையை துருத்தி போக்குவது போல் மனிதர்களின் பாவங்களை போக்கி விடும்." என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஜாபிர் கூறுகின்றார்கள்.
(ஸஹீஹ் முஸ்லிம், மிக்ஷ்காத் எண்:1543)

**கேள்வி : 04**
**கண்ணாடியில் முகம் பார்க்கும் போது நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு ஓதுவார்கள் என்று ஹதீஸ் வந்துள்ளதா?**

**"யா அல்லாஹ்! என் கோலத்தை அழகாக அமைத்தது போல் என் பண்புகளையும் அழகாக்கி வைப்பாயாக!"**

**"இது ஹதீஸ் அல்ல" என்றும் "இப்படி ஓதுவது நபி வழி அல்ல" என்றும் சிலர் கூறுகின்றனர். மற்றுமொரு சாரார் "இது நபி வழியாகும் முகம் பார்க்கும் போது இப்படி ஓதவேண்டும்." என்றும் கூறுகின்றனர். இவ்விரண்டில் எது சரி என்பதை ஆதரங்களுடன் தெளிவுபடுத்துமாறு வேண்டுகின்றோம்.**

**பதில் :**

கண்ணாடியைப் பார்க்கும் போது மேலேயுள்ள துஆவை நபி ந அவர்கள் ஓதினார்கள் என்று வந்துள்ள செய்தி பலயீனமானது என்று ஹதீஸ் கலை அறிஞர்கள் கூறுகின்றார்கள். அதற்கான காரணங்களையும் பின்வருமாறு கூறுகின்றார்கள்.

கண்ணாடியைப் பார்க்கும் போது இந்த துஆவை ஓதுவார்கள் என்று வந்துள்ள அறிவிப்புகளில் அபான், இப்னு முதவக்கில், அப்துர் ரஹ்மான், அம்ருபின் ஹூஸைன், யஹ்யா பின் அலா போன்றோர் பலயீனமானவர்களாகக் காணப்படுகின்றனர். இமாம் நவவியின் "அல்அத்கார்" என்ற நூலை மறு பரிசீலனை செய்த முஹீயுத்தின் மிஸ்து என்பவரும் இந்த ஹதீஸ் பலயீனமானது என்று கூறியுள்ளார்கள்.
( அல்அத்கார் பக்கம் : 338 )

அதே நேரத்திரத்தில் "கண்ணாடியைப் பார்க்கும் போது" என்ற வாசகம் இல்லாது, பொதுவாக நபி (ஸல்) அவர்கள் ஓதி வந்ததாக ஸஹீஹான ஹதீஸ்கள் வந்துள்ளன.

அந்த அறிவிப்புக்கள் வருமாறு :
"யா அல்லாஹ்! என் கோலத்தை அழகாக்கி வைத்துள்ளாய். எனவே எனது குணத்தையும் அழகாக்கி வைப்பாயாக.."
என்று நபி (ஸல்) அவர்கள் கூறுபவர்களாக இருந்தார்கள். என்று அன்னை ஆயிஷா ரழியல்லாஹூ அன்ஹா அவர்கள் கூறகிறார்கள்.
(ஆதாரம் : அஹ்மத்
அறிவிப்பாளர்கள் சரியானவர்கள். தரம் : சஹீஹ்
இர்வாகுல் கலீல் பா.01 பக்கம்:115)

இந்த அடிப்படையில் கண்ணாடியைப் பார்க்கும் போது துஆ ஓதுவதைத் தவிர்ந்து ஏனைய நேரங்களில் இந்த துஆவை ஓதிக் கொள்ளலாம்.

**கேள்வி : 05**
**வுழு செய்யும் போது பிஸ்மி கூற வேண்டுமா? சிலர் தேவை இல்லை என்றும், சிலர் கூற வேண்டும் என்றும் கூறுகின்றார்கள். அப்படி கூறத்தான் வேண்டும் என்றால் முழுமையாக அதனை கூற வேண்டுமா? அல்லது பிஸ்மில்லாஹ் என்று மட்டும் கூறினால் போதுமானதா?**

**பதில் :**

"பிஸ்மி" கூறாது வுழூச் செய்பவர்கள் சிலர் இருக்கின்றார்கள். இன்னும் சிலர் "பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர் ரஹீம்" என்று முழுமையாகக் கூறி வுழூச் செய்கின்றனர். இதில் சரியான விளக்கம் என்னவெனில் குர்ஆன் ஓதும் போது பிஸ்மியை முழுமையாக ஓதவேண்டும். அதே நேரத்தில் வுழூச் செய்யும் போது "பிஸ்மில்லாஹ்" என்றும் மட்டுமே கூறவேண்டும் முழுமையாக ஓதி வுழூச் செய்ய ஆதாரம் இல்லை.

"வுழூ இன்றி தொழுகை இல்லை. யார் அல்லாஹ்வின் திருநாமத்தைக் கூறவில்லையோ அவருக்கு வுழூ இல்லை" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
( அபூதாவுத் அஹ்மது இப்னுமாஜா தரம் : ஹசன்
ஹாபிழ் அல் முன்திரி - அத்தோலாபீ,
அல் ஹாபிழ் அல் இறாகீ ஆகியோர் இந்த ஹதீஸை
ஹசன் என்று கூறுகின்றார்கள்.

அல் இர்வா:. பாகம்:01 பக்கம் 122)

மற்றுமொரு அறிவிப்பில் நபி (ஸல்) அவர்களுக்கு வுழூ செய்ய தண்ணீர் கொண்டு வரப்பட்டதும் தங்கள் கையை தண்ணீரில் வைத்து, "பிஸ்மில்லாஹ் என்று வுழூச் செய்யுங்கள்" என்று கூறினார்கள்.
( ஆதாரம் நஸாஈ - எண் : 78 )

வணக்க வழிபாடுகளில் எதனையும் நம் விருப்பப்படி கூட்டாதும், குறைக்காதும் வந்ததை வந்த பிரகாரம் செய்ய வேண்டும்.

எனவே "பிஸ்மில்லாஹ் என்று கூறி வுழூச் செய்யுங்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் கூற, அதை மீறி "பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்" என்று கூறி வுழூச் செய்வதை ஒரு முஸ்லிம் தவிர்ந்து கொள்ள வேண்டும். காரணம் அப்படி நபி வழியை நாம் மீறும் போது எங்கள் அமல்கள் பாழாகிவிடும்.

அல்குர்ஆனில் அல்லாஹுத்தஆலா பின்வருமாறு கூறுகின்றான்:
"நீங்கள் அல்லாஹ்வுக்கும் வழிபடுங்கள், அவன் தூதருக்கும் வழிபடுங்கள். உங்கள் வணக்க வழிபாடுகளை பாழாக்கி விடாதீர்கள்."
(அல்குர்ஆன் - 47 : 33 )

ஒருவர் நபிவழிக்கு மாறுசெய்யும் போதுதான் அவரின் வணக்கங்கள் பாழாகும். எந்த இடத்தில் "பிஸ்மில்லாஹ" என்று மட்டும் கூறவேண்டும், எந்த இடத்தில் முழுமையாக "பிஸ்மி" கூற வேண்டும் என்ற ஒரு விளக்கம் இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் வெளியாகும்.

**கேள்வி : 06**

**பெண்கள் மல்லாந்து தூங்கக் கூடாது முகம் குப்புர தூங்க வேண்டும். ஆண்கள் முகம் குப்புர தூங்கக் கூடாது மல்லாந்து தூங்க வேண்டும். என்று ஒரு கருத்து பரவலாக சொல்லப்படுகின்றது இதன் படி அமலும் நடக்கின்றது. இது மார்க்கமா? அல்லது மனித கருத்தா? தெளிவு படுத்தவும்.**

**பதில் :**

மனித கருத்துக்களும், மனோ இச்சைகளும் மார்க்கத்தில் நுழைந்து தூய இஸ்லாமிய மார்க்கத்தை மாசுபடுத்தி விட்டன. இனிமையான இந்த மார்க்கம் இன்று அந்நிய மக்களுக்கு கசப்பாகத் தெரிகின்றது. இதற்கெல்லாம் காரணம் மக்கள் குர்ஆன் ஹதீஸை விட்டுவிட்டு மனித கருத்துக்களுக்கும், மனோ இச்சைக்கும் முக்கியத்துவம் வழங்கியதுதான். நாம் அடிக்கடி கூறுவது என்னவெனில், எங்களை நரக நெருப்பிலிருந்து காத்துக் கொள்ள எமது ஒவ்வொரு வணக்க வழிபாடுகளுக்கும் குர்ஆனிலிருந்தும், நபி வழியிலிருந்தும் ஆதாரம் இருக்கின்றதா? என்று பார்த்துக் கொள்ள வேண்டும். ஆதாரம் காணப்பட்டால் அமலைத் தொடர வேண்டும். அது இல்லையெனில், அதனை விட்டுவிட வேண்டும்.

இந்த மஸ்அலாவில் மார்க்கத்தை மக்கள் மாற்றியுள்ளார்கள் என்பது தெளிவாகின்றது. இதன் தெளிவு என்னவெனில், ஆண்களாயினும், பெண்களாயினும், குழந்தைகளாயினும் தூங்கும்போது தங்களது வலது கண்ணத்தில் வலது கையை வைத்து கிப்லா பக்கம் முகத்தை வைத்து தூங்க வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :
"தனது வலது பக்கம் தூங்கவும்."

ஸஹீஹ் முஸ்லிம் - பாடம் : பிரார்த்தனைகள்

நபி (ஸல்) அவர்கள் இரவில் தூங்கும் போது தனது கையை தன் கன்னத்தின் கீழ் வைப்பார்கள்.
(ஸஹீஹுல் புகாரி - பாடம் : த∴வாத்)

ஆண்கள், பெண்கள் இருசாராரும் முகம் குப்புற படுப்பதை நபி (ஸல்) அவர்கள் “நரகவாசிகளின் படுக்கை” என்று கூறியுள்ளார்கள். எனவே இது பெண்களையும் உள்ளடக்கும்.

ஆகவே, பெண்கள் முகம் குப்புற படுக்க வேண்டும் என்று மக்கள் மத்தியில் பரந்திருக்கின்ற கருத்து பின்வரும் ஹதீஸிற்கு மாற்றமானது என்பது தெளிவாகின்றது.

நபி (ஸல்) அவர்கள் ஓர் இரவு வெளியேறி (பள்ளிக்குள்) வந்தார்கள். ஒருவர் முகம் குப்புற படுத்திருந்ததைக் கண்ட நபி (ஸல்) அவர்கள், அவரின் காலைத் தட்டி விட்டார்கள். அவர் விழித்துக் கொண்டார். அப்போது “இது நரகவாசிகளின் படுக்கை” என்றார்கள்.
(அஹ்மது, அபூதாவூத், நஸாஈ, இப்னுமாஜா
தரம் : ஜய்யித்
புலூகுல் அமானி - பாகம் : 14, பக்கம் : 245)

மற்றுமொரு அறிவிப்பில் :
“நிச்சயமாக இந்த படுக்கையை அல்லாஹ் விரும்ப மாட்டான்”
என்று கூறினார்கள்.
( திர்மிதி - அத்த∴லீகாத் : பாகம் : 03, பக்கம் : 1336)

ஆகவே ஒவ்வொரு முஸ்லிமும் ஆணோ, பெண்ணோ, பிள்ளைகளோ நரகவாசிகளின் படுக்கையாகிய முகம் குப்புற படுப்பதை முற்றாகத் தவிர்ந்துகொள்ள வேண்டும்.

**கேள்வி : 07**

**சில பெரியார்கள் ஒரு வுழூவின் மூலம் பல தொழுகைகளைத் தொழுததாகச் சிலர் கூறுகின்றனர். இன்னும் சிலர் ஷஷஇதெல்லாம் கட்டுக் கதை. அப்படியானால் நபி ந அவர்கள் அப்படிச் செய்து காட்டியிருப்பார்கள்● ● என்று வாதிடுகின்றனர். இது சாத்தியமானதா? அல்லது சாத்தியமற்றதா? அப்படி ஒரே வுழூவில் பல தொழுகைகளைத் தொழுவது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதா?**

**பதில் :**

ஒருவருக்கு அப்படித் தொழ முடியுமானால் தொழுவது கூடும். அதே நேரத்தில் மலம், ஜலம் கழிக்க நேரிட்டால் அதை அடக்கிக் கொண்டு தொழுவது தடுக்கப்பட்டுள்ளது.

நபி (ஸல்) அவர்கள் மக்கா வெற்றியின் போது ஒரே வுழூவின் மூலம் பல தொழுகைகளைத் தொழுதுள்ளார்கள் என்று பின்வரும் ஹதீஸ் காட்டுகின்றது.

ஷஷநிச்சயமாக நபி (ஸல்) அவர்கள் மக்கா வெற்றியின் போது ஒரு வுழூவின் மூலம் பல தொழுகைகளைத் தொழுதார்கள். இதைக் கண்ட உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள், “இதற்கு முன் செய்யாத ஒரு செயலை இன்று செய்துள்ளீர்களே?” என்று கேட்க, “வேண்டுமென்றே இதனைச் செய்தேன் உமரே!” என்று கூறினார்கள்.
(ஸஹீஹ் முஸ்லிம் - பாடம் : ஒரு வுழூ மூலம் பல தொழுகைகள்)

### கேள்வி : 08

**சிலர் பள்ளிக்குள் நுழையும் போது நபி (ஸல்) அவர்கள் மீது ஸலாம் கூறுகின்றார்கள். இன்னும் சிலர் "இப்படி ஸலாம் கூறுவது பித்அத்" என்றும் "அது நபி (ஸல்) அவர்கள் உயிரோடிருக்கும் போது கூறப்பட்ட ஹதீஸ்" என்றும் "இப்போதிருக்கும் பள்ளிகளுக்குள் நுழையும்போது ஸலாம் கூறத் தேவையில்லை" என்றும் வாதிடுகின்றனர். இதன் உண்மையான தெளிவு என்ன என்பதை விளக்கவும்.**

### பதில் :

உயிரோடிருக்கும் எந்தவொரு முஸ்லிமைச் சந்தித்தாலும் ஸலாம் கூறுவது கட்டாயக் கடமையாகும். நபி (ஸல்) அவர்கள் வபாத்தான பின்னும் அவர்கள்மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறும்படி அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்.

"நிச்சயமாக அல்லாஹ்வும் அவனுடைய மலக்குகளும் நபியின்மீது ஸலவாத்து கூறுகின்றார்கள். விசுவாசிகளே! நீங்களும் அவர்மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுங்கள்."
( அல்குர்ஆன் - 33 : 56 )

இதே போன்று நாம் பள்ளிக்குள் நுழையும்போதும் அதிலிருந்து வெளியேறும் போதும் நபி ந அவர்கள் மீது ஸலாம் கூறுமாறு நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள்.

"உங்களில் ஒருவர் பள்ளிக்குள் நுழையும் போது நபி (ஸல்) அவர்கள் மீது ஸலாம் கூறவும்"
அபூதாவூத் - பாடம் : பள்ளிக்குள் நுழைதல்
அல்ஜாமிஉஸ் ஸகீர் - பாகம்: 01, பக்கம் : 150

மற்றுமொரு அறிவிப்பில் :
"பள்ளியிலிருந்து வெளியேறினால் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலாம் கூறவும்"
(இப்னுமாஜா - பாடம் : பள்ளிக்குள் நுழையும் போது
அல் ஜாமிஉஸ் ஸகீர் - பாகம் : 01, பக்கம் : 150)

எனவே பள்ளிக்குள் நுழையும் போது ஸலாம் சொல்லுதல் பித்அத் என்பவர்களின் வாதம் பிழையானதாகும். இந்த இரண்டு ஸஹீஹான ஹதீஸ்களின்படி பள்ளிக்குள் நுழையும் போதும், வெளியேறும் போதும்

"அஸ்ஸலாமு அலா ரஸூலுல்லாஹ்"
என்று கூறுவது கட்டாயக் கடமையாகும்.

### கேள்வி : 09

**இமாம் ஜமாஅத் நடக்கும்போது இமாம் ருகூஃவில் இருக்கின்றார். தாமதித்து வரும் ஒருவர் அந்த ருகூஃவில் இமாமுடன் இணைந்து கொண்டால், அந்த ரக்அத் அவருக்குக் கணக்கிடப்படுமா? அல்லது இமாம் ஸலாம் கொடுத்த பின் அவர் எழுந்து ஒரு ரக்அத் தொழ வேண்டுமா? இது சம்பந்தமாக பல கருத்துக்கள் அடிபடுகின்றன. இதற்கான சரியான பதிலை ஆதாரத்துடன் தரவும்.**

பதில் :

பாதிஹா ஸூரா ஓதாதவருக்கு தொழுகையே இல்லை என்று ஸஹீஹான ஹதீஸ் வந்துள்ளதால், ஒருவர் தாமதித்து வந்து பாதிஹா ஸூரா ஓதாது இமாமுடன் ருகூஃவில் சேர்ந்து கொண்டால், அந்த "ரக்அத்" கணக்கிடப்பட மாட்டாது. அவர் இமாம் ஸலாம் கொடுத்த பின் எழுந்து தவறிய ஒரு ரக்அத்தைத் தொழுது கொள்ள வேண்டும். "அப்படித் தொழத் தேவையில்லை, பாதிஹா ஸூரா ஓதாது இமாமுடன் ருகூஃவில் இணைந்து கொண்டால், அந்த ரக்அத் கணக்கிடப்படும். எழுந்து தொழத் தேவையில்லை" என்று கூறுபவர்கள் ஸஹீஹான ஹதீஸை ஆதாரமாகக் காட்டவில்லை. மாறாக, ஒரு லயீபான-பலயீனமான ஹதீஸையே முன்வைக் கின்றார்கள்.

அந்த ஹதீஸ் பின்வருமாறு:
"யார் இமாம் தன் முதுகை உயர்த்த முன் ஒரு ரக்அத்தை அடைந்து கொண்டாரோ, அவர் அதை அடைந்து கொண்டார்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இந்த ஹதீஸ் அறிவிப்பாளர் தொடரில் யஹ்யா பின் ஹுமைத் என்ற நபர் காணப்படுகின்றார். இவர் "மஜ்ஹூல் - இனம் காணப்படாதவர். இவரின் ஹதீஸ் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது" என்று இமாம் புகாரி கூறுகின்றார்கள்.
( ஜுஸ்வுல் கிராஅத் - பக்கம் : 50 )

எனவே இந்த ஹதீஸ் பலயீனமானதாக உள்ளதாலும் பாதிஹா ஸூரா இல்லாது தொழுகை இல்லை என்று வந்துள்ளதாலும் இந்த ஹதீஸ்படி அமல் செய்யாது இமாம் ஸலாம் கொடுத்த பின் மீண்டும் எழுந்து பாதிஹா ஸூரா ஓதி, ஒரு ரக்அத் தொழுது கொள்ள வேண்டும்.

## கேள்வி : 10

**வித்ர் தொழுகை கட்டாயம் தொழ வேண்டுமா? வித்ர் மூன்று ரக்அத்தை ஒரே ஸலாமில் தொழ வேண்டுமா? அல்லது பிரித்து இரண்டு ஸலாமில் தொழ வேண்டுமா?**

பதில் :

வித்ர் தொழுகை தொழுவது கடமையாகும். நபி (ஸல்) அவர்கள் வித்ர் தொழும்படி கட்டளையிட்டுள்ள ஹதீஸ் பின்வருமாறு :
"காலையாகுவதற்கு முன் வித்ர் தொழுது கொள்ளுங்கள்"
என நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டதாக அபூஸயீத் (ரலி) அவர்கள் கூறினார்கள்.
( ஸஹீஹ் முஸ்லிம் - எண் : 1761 )

இரவுத் தொழுகையின் இறுதியில் வித்ர் தொழ வேண்டும். அதில் ஒன்றும் தொழலாம், மூன்றும் தொழலாம். மூன்று தொழுவதாயின் ஒரே ஸலாமில் தொழாது இரண்டை முதலாவது தொழுது ஸலாம் கொடுத்த பின், ஒரு ரக்அத் தனியாகத் தொழ வேண்டும். காரணம், "மஃரிப் தொழுகைக்கு வித்ரை ஒப்பாக்காதீர்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள். மூன்றை ஒரே ஸலாமில் தொழுதால் அது மஃரிபிற்கு ஒப்பாகி விடும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :
"மூன்றாக வித்ர் தொழாதீர்கள். ஐந்து அல்லது ஏழு தொழுங்கள். மஃரிப் தொழுகைக்கு

(வித்ரை) ஒப்பாக்காதீர்கள்.''
(தாரகுத்னி, அல் ஹாகிம், இப்னு ஹிப்பான், முஹம்மது பின் நஸ்ர்)

''இந்த அறிவிப்பாளர் தொடர் ஸஹீஹானது'' என்று இமாம் இறாகி கூறுகின்றார்.
''அறிவிப்பாளர்கள் அனைவரும் நம்பகமானவர்கள்'' என்று ஹாபிழ் இப்னு ஹஜர் கூறுகின்றார்.

## கேள்வி : 11

**ஒருவர் தொழுகையில் இருக்கும் போது தொழுகையிலும், ஓதலிலும் பல சந்தேகங்கள் ஏற்பட்டு தொழ முடியாத அளவிற்கு சந்தேகம் கூடி விடுகின்றது. இந்த நிலையில் தொழுகையை அப்படியே விட்டுவிட்டு மனதை உறுதிப்படுத்திக் கொண்டு மீண்டும் தொழுகையை ஆரம்பிக்க வேண்டும் என்று சிலரும், ''சந்தேகம் ஏற்பட்டால் பரவாயில்லை, தொழுகையை விடாது தொடர வேண்டும்'' என்று சிலரும் கூறுகின்றனர். இதில் எது சரியானது? சந்தேகம் ஏற்படாது தொழ வழி யாது?**

பதில் :

''தொழுகையில் இப்படியான சந்தேகங்களை ஷைத்தான் ஏற்படுத்துவான்'' என்றும், அவனின் பெயர் ''கின்ஸப்'' என்றும் கூறிய நபி (ஸல்) அவர்கள் அப்படி ஏற்பட்டால், என்ன வழி என்பதனையும் விபரித்துள்ளார்கள்.

உத்மான் பின் ஆஸ் என்ற நபித்தோழர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, ''அல்லாஹ்வின் தூதரே! நிச்சயமாக ஷைத்தான் எனக்கும், என் தொழுகை, ஓதல்களுக்குமிடையில் புகுந்து எனக்கு குழப்பத்தை ஏற்படுத்தி விடுகின்றான்'' என்றார்கள். அதற்கு, ''அவன் ஷைத்தான், அவனின் பெயர் கின்ஸப், அவன் வந்து விட்டான் என்பதை நீ உணர்ந்தால், அல்லாஹ்விடத்தில் அவனின் தீங்கிலிருந்து பாதுகாவல் தேடி, உனது இடது பக்கம் மூன்று முறை துப்பி விடு'' என்று கூறினார்கள்.
''நான் அதை (அப்படியே) செய்தேன். அல்லாஹ் அவனை என்னை விட்டும் போக்கிவிட்டான்''
என்று அந்த நபித் தோழர் கூறினார்கள்.
(ஸஹீஹ் முஸ்லிம் - எண் : 5702)

குறிப்பு : தொழுகையில் இந்த சந்தேகம் ஏற்பட்டால் பாதுகாப்புத் தேடும் முறை : ''நான் அவனிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகின்றேன்'' என்று ஒருமுறை கூறி இடது பக்கம் ''தூ'' என்று மூன்று முறை செய்ய வேண்டும்.

## கேள்வி : 12

**பெண்கள் தொழும்போது குழந்தைகள் அழ ஆரம்பித்தால், உள்ளச்சத்துடன் சரியாக தொழ முடியாது. தொழுது முடியும் வரை அப்படியே பிள்ளையை விட்டு விட்டால், அது அழுது விறைத்து வேறு நோய்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கின்றன. இந்நிலையில் ஒரு பெண் எவ்வாறு தொழுவது என்பதை விளக்கவும்.**

**பதில் :**

தொழும் ஒரு பெண்ணிற்கு இவ்வாறான நிலை ஏற்பட்டால், தொழுகையின் நிலையில் குழந்தையை தூக்கி வைத்துக் கொண்டு தொழலாம். ருகூஃ செய்யும் போது குழந்தையை கீழே வைத்து விட்டு, ருகூஃவும், ஸுஜூதும் முடிந்ததும் மீண்டும் குழந்தையை தூக்கி வைத்துக் கொள்ளலாம்.

அபூ கதாதா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :
நபி (ஸல்) அவர்கள் மக்களுக்கு இமாமத் நடாத்தும் போது, அவர்களின் மகள் ஸைனபின் பிள்ளை உமாமா பின்த் ஆஸ் அவர்களின் தோளில் இருக்கக் கண்டேன். அவர்கள் ருகூஃ செய்யும் போது உமாமாவைக் கீழே வைத்தார்கள். ஸுஜூதிலிருந்து எழும்பும் போது மீண்டும் தூக்கிக் கொண்டார்கள்.
(ஸஹீஹ் முஸ்லிம் - எண் : 1214)

**கேள்வி : 13**

**ஒருவர் தொழுகையில் இருக்கும் போது திடீரென நெஞ்சிலிருந்து சளி வெளியாகி விட்டால், என்ன செய்வது?**

**பதில் :**

தொழுகையில் இப்படியானதொரு நிலை ஏற்பட்டால், இடது பக்கம் தன் காலிற்குக் கீழே அதனைத் துப்பலாம். துப்பி தன் காலில் பாதணி அணிந்திருந்தால், அதனால் அதை தேய்த்து விட வேண்டும். அல்லது தன்னிடமுள்ள கைக்குட்டை அல்லது துணியில் ஒரு மூலையில் துப்பி அதனைத் தேய்த்து விட வேண்டும். முன்னால், வலது பக்கம் துப்பக் கூடாது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :
"உங்களில் ஒருவர் தொழுகையில் இருக்கும் போது அவர் தன் ரப்புடன் பேசிக் கொண்டிருக்கின்றார். எனவே தனக்கு முன்னாலோ, தனது வலது பக்கத்திலோ துப்ப வேண்டாம். எனினும் தனது இடது காலுக்குக் கீழ் துப்பவும்."
( ஸஹீஹுல் புகாரி - பாடம் : துப்புதல் கூடும் )

மற்றுமொரு அறிவிப்பில் :
தனது துணியின் ஓரத்தை எடுத்து, அதில் துப்பி தேய்த்து விட்டார்கள்.
( ஸஹீஹுல் புகாரி - பாடம் : மஸாஜித் )

மற்றுமொரு அறிவிப்பில்:
தரையில் துப்பி இடது கையால் தேய்த்து விட்டார்கள்.
( ஸஹீஹ் முஸ்லிம் - எண் :1235 )

**கேள்வி : 14**

**அறபு நாடுகளில் பிரயாணத்திலிருப்பவர்கள் தொழுகை நேரம் வந்து விட்டால், செருப்பை அணிந்தவாறே அதனைக் கழற்றாது தொழுகிறார்கள்.**

**அல்லாஹ் அல்குர்ஆனில் :**

"மூஸாவே! உமது பாதணிகளைக் கழற்றும்" (20 : 12)

**என்று கட்ளையிட்டிருக்கின்றான். எனவே செருப்பை அணிந்தவாறு தொழுவது அல்குர்ஆனுக்கு மாற்றமாகாதா? இந்தத் தொழுகை கூடுமா என்பதைத் தெளிவு படுத்தவும்..**

**பதில் :**

மூஸா (அலை) அவர்களுக்கு அல்லாஹ் கட்டளையிட்டது தொழுகையில் அல்ல. "துவா" என்ற பரிசுத்த ஓடையில் வைத்து அதனைக் கழற்றுமாறு கட்டளையிட்டான். தொழுகைக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

அப்படியே ஒரு முன்னைய நபி ஒரு செயலைச் செய்து அதற்கு மாற்றமாக இறுதி நபி முஹம்மது (ஸல்) அவர்கள் செய்திருந்தால், முன்னைய சட்டம் பின்னைய சட்டத்தைக் கொண்டு மாற்றப்பட்டு விட்டது என்றே நாம் கருத வேண்டும்.

இப்போது தொழுகையில் ஒருவர் செருப்பு அணிந்தவாறு தொழலாமா? என்றால், அது கூடும் என்பதே க்ஷரீஆவின் சட்டமாகும். ஆனால் ஒரு நிபந்தனை, பாதணியில் நஜீஸ் காணப்படக் கூடாது.

நபி (ஸல்) அவர்கள் அதிகமாக செருப்பு அணியாமலே தொழுதுள்ளார்கள். சில வேளைகளில் பாதணி அணிந்தவாறும் தொழுதுள்ளார்கள். எனவே ஒருவர் செருப்பு அணிந்து தொழுதால், அதை யாரும் ஆட்சேபிக்க வேண்டிய அவசியமில்லை.

ஸயீது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :
"நான் அனஸ் (ரலி) அவர்களிடம் நபி (ஸல்) அவர்கள் இரு செருப்புகள் அணிந்தவாறு தொழுதுள்ளார்களா? " என்று கேட்டேன். அதற்கு (அவர்) "ஆம்" என்று கூறினார்கள்.
(ஸஹீஹ் முஸ்லிம் - எண் : 1236)

**கேள்வி : 15**

**நபி (ஸல்) அவர்கள் வித்ரில் குனூத் ஓதினார்கள். குனூத் ஒவ்வொரு நாளும் ஓத வேண்டுமா? அல்லது ரமழான் 15இலிருந்து ஓத வேண்டுமா? குனூத்தின் வாசகங்கள் என்ன?**

**பதில் :**

நபி (ஸல்) அவர்கள் வித்ரில் குனூத் ஓதியுள்ளார்கள். அது தினமும் வித்ரில் ஓத வேண்டிய நபிவழியாகும். ரமழான் 15 இல் இருந்துதான் ஓத வேண்டும் என்பதற்கு ஸுன்னாவில் ஒரு ஆதாரமும் இருப்பதாக தெரியவில்லை. எனவே, நாம் நபி வழியைப் பின்பற்றி தினமும் வித்ரில் குனூத் ஓதிக் கொள்ள வேண்டும்.

ஜமாஅத்துடன் வித்ர் தொழும் போது :
" அல்லாஹும்ம அஹ்தினா ஃபீமன் ஹதய்த். வ ஆஃபினா ஃபீமன் ஆஃபய்த். வதவல்லனா ஃபீமன் தவல்லய்த். வ பாரிக்லனா ஃபீமா அஃதய்த். வகினா க்ஷர்ரமா கதய்த். ஃபஇண்ணக தக்தீ வலா யுக்தா அலைக். இன்னஹூ லா யதில்லு மன் வாலைத். தபாரக்த ரப்பனா வதஆலைத். " "நபி (ஸல்) அவர்கள் இந்த துஆவை ஓத நான் கேட்டேன்" என்று அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

( இப்னு ஹிப்பான் - ஸஹீஹ் : 2 - 430 )

தனியாக வித்ர் தொழும்போது :
" அல்லாஹூம்ம அஹ்தினீ ∴பீமன் ஹதய்த். வ ஆ∴பினா ∴பீமன் ஆ∴பய்த். வதவல்லனீ ∴பீமன் தவல்லய்த். வ பாரிக்லீ அ∴தய்த். வகினீ கஷ ர்ரமா கதய்த். ∴பஇண்ணக தக்தீ வலா யுக்தா அலைக். இன்னஹூ லா யதில்லு மன் வாலைத். வலா யஇஸ்ஸூமன் ஆதய்த். தபாரக்த ரப்பனா வதஆலைத். "
( திர்மிதி, அபூதாவூத் - ஹஸன், - மிர்ஆத் பா : 02, பக் : 213 )

**கேள்வி : 16**

**பெண்கள் தொழும்போது வழமையாக தங்கள் தலைமுடியை சுருட்டி கட்டிக் கொண்டே தொழுவார்கள். காரணம், முடி தொங்கிக் கொண்டிருந்தால் அதில் கைஷத்தானும் தொங்குவான் என்ற நம்பிக்கையினாலாகும். ஆனால் புதிதாக சிலர் வந்து, "தலைமுடியைக் கட்டிக் கொண்டு தொழக் கூடாது" அப்படித் தொழுதால், "அது நபி (ஸல்) அவர்களின் கட்டளைக்கு மாறு செய்வதாகும்" என்று கூறுகின்றார்கள். எனவே இதைப் பற்றிய சரியானதொரு தெளிவைத் தரவும்.**

**பதில் :**

பெண்கள், ஆண்கள் (முடி வைத்திருந்தால்) இரு சாராரும் தலை முடியை சுருட்டாதும், கட்டாதும் தொங்க விட்டவண்ணம் தொழ வேண்டும். மாறாக "தொங்க விட்டால் கைஷத்தான் தொங்குவான்" என்பது ஆதாரமற்ற மூட நம்பிக்கையாகும்.

நபி (ஸல்) அவர்களின் வபாத்திற்குப் பின் கால ஓட்டத்தில் இஸ்லாம் சின்னா பின்னமாக்கப்பட்டு, மார்க்கத்தில் உள்ளதை இல்லாமலாக்கி, இல்லாததை மார்க்கத்தில் புகுத்தி மார்க்கத்தையே மாற்றி விட்ட ஓர் உண்மை நிலையை நாம் காண்கின்றோம்.

இந்த வரிசையில் முடியை தொங்கவிட்டு தொழ வேண்டும் என்ற நபி வழியை மாற்றி, அதற்கு ஒரு பொய்யையும் புனைந்து முடியை கட்டிக் கொண்டு தொழும் பழக்கம் இருப்பதை நாம் காண்கின்றோம்.

"ஒருவர் முடியைக் கட்டிக் கொண்டு தொழுதால், அவர் இரு கைகளையும் பின்னால் கட்டியவாறு தொழுதவரைப் போலாவார்" என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அப்படி ஓர் ஆண் அல்லது ஒரு பெண் தொழும்போது இரு கைகளும் தரையில் படாததுபோல் ஆகிவடும். ஆனால் ஏழு உறுப்புக்களின் மீது ஸஜ்தா செய்யும் படி நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :
"எழு உறுப்புக்களால் ஸஜ்தா செய்ய வேண்டும் என்றும் முடியையோ, ஆடையையோ மடிக்க (சுருட்ட)க் கூடாது என்றும் நான் ஏவப்பட்டுள்ளேன்."
( ஸஹீஹ் முஸ்லிம் - 1096 )

மற்றுமொரு அறிவிப்பில் :
அப்துல்லாஹ் பின் ஹாரித் (ரலி) அவர்கள் தொழுது கொண்டிருப்பதை இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கண்டார்கள். அவர் (தன் முடியை வளர்த்து) தலையில் கொண்டை கட்டியவாறு இருந்தார். இதனைக் கண்ட இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், எழுந்து சென்று கொண்டையை அவிழ்த்து விட்டார்கள்.

அவர்கள் தொழுது முடிந்ததும் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடம் சென்று “ஏன் இப்படி அவிழ்த்தீர்கள்?” என்று கேட்டார்கள். அதற்கு இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் தான் கேட்ட ஹதீஸை பின்வருமாறு கூறினார்கள் :
“நிச்சயமாக நான் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டேன். திண்ணமாக இவர் (இப்படித் தொழுபவர்) தன் இரு கைகளையும் பின்னால் கட்டிக் கொண்டு தொழுதவர் போலாவார்.”
( ஸஹீஹ் முஸ்லிம் - எண் : 1101 )

ஆகவே எமது பழக்க வழக்கங்களை விட்டு விட்டு வணக்க வழிபாடுகளில் இஸ்லாம் என்ன கூறுகின்றது என்பதைக் கவனித்து அதன்படி அமல் செய்ய பக்குவப்பட வேண்டும். இந்த அறிவிப்பின்படி நாம் தொழும்போது தலை முடியை தொங்க விட்டவாறு தொழ வேண்டும்.

**கேள்வி : 17**

**பர்ளான தொழுகை, ஸுன்னத்தான தொழுகை தொழும்போது கண்ணாடி அணிந்திருப்பவர்களின் மூக்கு தரையில் படுவதில்லை. மூக்கு படும்படி தொழ வேண்டும் என்று கூறினால், “இல்லை, ஏழு உறுப்புக்கள் மட்டும் தரையில் பட்டால் போதும் என்று ஹதீஸ் வந்துள்ளது” என்று கூறி விடுகின்றனர். மூக்கு படாவிட்டால் தொழுகை கூடுமா?**

**பதில் :**

தொழுபவர் மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தால், அவரின் மூக்கு தரையில் படாது என்பது உண்மை. எனவே அவர் தொழும்போது கண்ணாடியை கழற்றி விட்டே தொழ வேண்டும். ஏழு உறுப்புக்கள் மீது ஸஜ்தா செய்யும்படி கூறிய அதெ நபிதான் நெற்றியுடன் மூக்கையும் இணைத்துக் கூறினார்கள். மூக்கும் தரையில் பட வேண்டும் என்று வந்துள்ள அறிவிப்பு பின்வருமாறு :

“ நான் ஏழு உறுப்புக்களால் ஸுஜூது செய்ய வேண்டும் என்றும் முடியை சுருட்டக் கூடாது, ஆடையை மடிக்கக் கூடாது என்றும் ஏவப்பட்டுள்ளேன். (அவை) நெற்றி மூக்கு - இரு கைகள் - இரு முழங்கால்கள் - இரு பாதங்கள்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.
ஸஹீஹ் முஸ்லிம் - எண் : 1099

மற்றுமொரு அறிவிப்பில் மூக்கு தரையில் படாவிட்டால் அவருக்கு தொழுகை இல்லை என்றும் வந்துள்ள ஹதீஸ் பின்வருமாறு :
“நெற்றிபடும்போது எவரின் மூக்கு தரையில் படவில்லையோ அவருக்குத் தொழுகை இல்லை” என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்.
( பைஹகி, ஹாகிம் : 997 - ஸஹீஹ் )

இப்படி ஹதீஸ்கள் தெளிவாக வந்துள்ளதால், தொழும்போது மூக்குக் கண்ணாடியைக் கழற்றி வைத்து விட்டு மூக்கு தரையில் படும்படி தொழ வேண்டும். இது ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் பொதுவானதாகும்.

**கேள்வி : 18**

**தவ்பாத் தொழுகை என்ற ஒன்று மார்க்கத்தில் உள்ளதா? அது எத்தனை ரக்அத்துகள்? அதை எப்படித் தொழுவது? எப்போது தொழுவது?**

**பதில் :**

ஸலாத்துத் தௌபா என்று ஒரு தொழுகை இருக்கின்றது. அது இரண்டு ரக்அத்துகள் தொழப்பட வேண்டும். ஏனைய தொழுகைகள் எப்படித் தொழப்படுமோ, அப்படித் தொழப்படும். எந்த வித்தியாசமும் இல்லை. ஒருவர் ஒரு பாவத்தைச் செய்து விட்டால், அவர் உடனே வுழூச் செய்து இரண்டு ரக்அத்துகள் தொழுது அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரி தௌபாவும் செய்தால், அல்லாஹ் அவரின் பாவத்தை மன்னிப்பான்.

அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.
நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறக் கேட்டேன் :
ஷஷஎந்தவொரு மனிதனாவது ஒரு பாவத்தைச் செய்து பிறகு வுழூச் செய்து தொழுது அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரினால், அல்லாஹ் அவரை மன்னிப்பான்● ● என்று கூறிவிட்டு, ஸூரா ஆல இம்ரானின் 135வது வசனத்தை ஓதினார்கள்.

அவர்கள் எந்தவொரு மானக்கேடானதைச் செய்தாலோ, அல்லது தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டாலோ அல்லாஹ்வை நினைத்து தமது பாவங்களுக்கு பாவமன்னிப்புத் தேடுவார்கள். அல்லாஹ்வைத் தவிர பாவங்களை மன்னிப்பவன் யார்? தாங்கள் செய்ததில் தெரிந்து கொண்டே அவர்கள் நிலைத்திருக்க மாட்டார்கள்.
(திர்மிதி - எண் : 333 - ஹஸன்)

அபூதாவூதின் அறிவிப்பில் ஷஷஇரண்டு ரக்அத்துக்கள்● ● என்று வந்துள்ளன.
( மிர்ஆத் - எண் : 239 )

இந்த ஹதீஸிலிருந்து ஒரு முஸ்லிம் படிக்க வேண்டிய பாடம் என்னவெனில், மனிதன் எப்போதும் பாவத்தின்பால் தூண்டப்படக் கூடியவன். பாவத்தை செய்யும்படியே ஷைத்தான் அவனைத் தூண்டுவான்.

“ஆதமின் சந்ததிகள் தவறு செய்பவர்களே. தவறு செய்பவர்களில் சிறந்தவர்கள் தௌபாச் செய்து மீள்பவர்களே” என்ற நபி மொழிக்கொப்ப, ஏதும் தவறுகள் அவர்களில் நடந்து விட்டால், உடனே அவர்கள் வுழூச் செய்து, இரண்டு ரக்அத்துகள் தொழுது, இஸ்தி∴பார் செய்து அவனின்பால் மீள வேண்டும் என்பதாகும்.

இஸ்தி∴பார் - தௌபாச் செய்யும் முறை:
“அஸ்த∴வ் ∴பிருல்லாஹ வஇதூபி இலைக்”
இதைத் தொழுது முடிந்ததும் கேட்கலாம். தொழுகையின் ஸுஜூதிலும் கேட்கலாம்.

**கேள்வி : 19**

**“ஜனாஸாத் தொழுகையில் பாதிஹா ஸூரா மட்டும் ஓத வேண்டும். பாதிஹா அல்லாத வேறு ஸூராக்கள் ஓதுவதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை” என்று சிலர் வாதிடுகின்றனர். இது சம்பந்தமான தெளிவு என்ன?**

**பதில் :**

மார்க்கத்தில் எத்தனையோ ஸுன்னாக்கள் ஒழிக்கப்பட்டுள்ளன. அதில் இதுவும் ஒன்று. ஜனாஸா தொழுகையில் நபி (ஸல்) அவர்கள் பாதிஹாவும் மற்றுமொரு ஸூராவும் ஓதியதாக இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் செய்து காட்டிவிட்டு, சொல்லாலும் கூறினார்கள். இப்படித் தெளிவான ஆதாரம் காணப்படும் போது எப்படி இதை மறுக்க முடியும்?

தல்ஹா பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.
“நான் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களுக்குப் பின்னால் ஜனாஸாத் தொழுகை தொழுதேன். (அதில்) பாதிஹா ஸூராவும் மற்றுமொரு ஸூராவும் ஓதினார்கள். அவைகளை எங்களுக்குக் கேட்கும்படியும் ஓதினார்கள். தொழுகை முடிந்ததும் அவர்களின் கையைப் பிடித்துக் கொண்டு இது சம்பந்தமாகக் கேட்டேன். அதற்கு “(இது) ஸுன்னத் என்றும் (இது) ஹக்கு” என்றும் கூறினார்கள்.
நஸாஈ - எண் : 1986 - ஸஹீஹ்

இந்த சம்பவத்திலிருந்து தெரியவருவது யாதெனில், ஜனாஸாத் தொழுகையில் பாதிஹாவும் வேறொரு ஸூராவும் ஓதுவது நபிவழியாகும். இந்த நபி வழி அதிகமானவர்களுக்குத் தெரியாது இருந்துள்ளது. தல்ஹா (ரலி) என்பவரும் இப்படி எவரும் ஓதியதை செவியுற்றதில்லை. இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் இந்த ஸுன்னாவை உயிர்ப்பித்ததும் தல்ஹா (ரலி) அவர்களுக்கு ஆச்சரியம் ஏற்பட்டு, தொழுகை முடிந்ததும் இதைப் பற்றி விசாரித்துள்ளார்கள். அதற்கு இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் “இது ஸுன்னத், ஹக்கு” என்று கூறியதும் தல்ஹா (ரலி) அவர்கள் மௌனமாகிவிட்டார் என்பதாகும்.

எனவே மார்க்க விடயத்தில் யார் எதைச் சொன்னாலும் குர்ஆன், ஸுன்னாவிலிருந்து ஆதாரத்தைக் கேட்க வேண்டும். ஆதாரமற்ற செய்திகளைப் புறக்கணித்து விட்டு, ஆதாரமுள்ள செய்திகளைக் ஏற்க வேண்டும்.

ஆகவே ஜனாஸாத் தொழுகையில் பாதிஹாவும் இன்னுமொரு ஸூராவும் ஓதுவது நபிவழி என்பது தெளிவான ஒரு விடயமாகும்.

**கேள்வி : 20**

**தெளிவு முதல் இதழில் “பெண்கள் மண்ணறைகளைச் சந்திப்பது கூடும்” என்று எழுதப்பட்டிருந்தது.**

**ஆனால் ஒரு சில உலமாக்கள் :**
**“ஸியாரத் ஆண்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது.”**
**“பெண்களுக்குத் தடை செய்யப்பட்டுள்ளது.”**
**“ஸியாரத் செய்யும் பெண்களை நபி (ஸல்) அவர்கள் சபித்துள்ளார்கள்”**
**“ஆரம்பத்தில் ஸியாரத்தை நபி (ஸல்) அவர்கள் தடை செய்திருந்தார்கள், பிறகு அனுமதி வழங்கினார்கள். இந்த அனுமதி ஆண்களுக்கு மட்டுமே, பெண்கள் இதில் அடங்கமாட்டார்கள”**
**என்று கூறி**

**“பெண்கள் இன்றைக்கும் ஸியாரத் செய்ய முடியாது”**
**“இது ஹராம்” என்று வாதிடுகின்றனர். எனவே இது சம்பந்தமாக நல்லதொரு தெளிவு தருமாறு வேண்டுகின்றோம்.**

**பதில் :**

நபி (ஸல்) அவர்கள் கப்றுகளை ஸியாரத் செய்வதைத் தடை செய்திருந்தார்கள். பிறகு “அதைத் தரிசியுங்கள்” என்று பொதுவாகக் கூறினார்கள். இதில் ஆண்களும் பெண்களும் அடங்குவார்கள். பெண்களை சபித்த ஹதீஸ் தடுக்கப்பட்ட காலத்தில் கூறப்பட்டது. இந்த “இப்போது சந்தியுங்கள்” என்ற கட்டளையில் “பெண்கள் அடங்கமாட்டார்கள், ஆண்கள் மட்டுமே அடங்குவார்கள்” என்று கூறுபவர்கள் சரியான ஆதாரத்தை முன்வைக்க வேண்டும் என்று நாம் கூறியிருந்தோம்.

மேலும் நபி (ஸல்) அவர்கள் வபத்தான பின் அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் தங்கள் சகோதரர் அப்துர் ரஹ்மானின் கப்றுக்குச் சென்று தரிசித்து விட்டு வந்ததைக் கண்ட ஒருவர் “இது கூடுமானதா?” என்று வினவ, “ஆம், நபி (ஸல்) அவர்கள் தடுத்து விட்டு பிறகு அனுமதி வழங்கி விட்டார்கள்” என்று கூறிய ஒரு செய்தியையும் நாம் தெளிவு முதலாம் இதழில் தந்திருந்தோம்.

இவர்கள் வாதிடுவது போன்று பெண்களுக்கு ஸியாரத் இல்லை என்றிருந்தால், அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஒரு “ஸியாரத்” செய்து விட்டு பின்பு அதுபற்றி கேட்கப்பட்ட போது, “தடைக்குப் பின் அனுமதி தந்து விட்டார்கள்” என்று ஒரு பொய்யையா கூறினார்கள்? நஊது பில்லாஹ்.

அடுத்ததாக ஸஹீஹ் முஸ்லிமில் அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் “நான் மண்ணறைவாசிகளைச் சந்தித்தால் என்ன ஓத வேண்டும்?” என்று கேட்க, “பின்வருமாறு ஓது” என்று கற்றுக் கொடுத்தார்களே தவிர, “இது பெண்களுக்குக் கூடாது” என்று கூறவில்லை.

**“அஸ்ஸலாமு அலா அஹ்லித்தய்ரி மினல் மு:.மினீன வல் முஸ்லிமீன். வ யர்ஹமுல்லாஹு முஸ்தக்திமீன். வ இண்ணா இன்ஷா அல்லாஹு பிகும் லலாஜிகூன்.”**

அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் ஸியாரத் பற்றிக் கேட்ட நீண்டதொரு
ஹதீஸின் சுருக்கம் :
அதற்கு நான் (அன்னை ஆயிஷா ) “அல்லாஹ்வின் தூதரே! அவர்களுக்கு (மண்ணறை வாசிகளுக்கு) நான் எவ்வாறு கூறுவது? என்று வினவிய போது, அதற்கு “இவ்வாறு கூறு” என்று (மேலேயுள்ள துஆவை) கூறினார்கள்.

இதன் பொருள் :
மண்ணறைகளில் இருக்கும் மு:.மின்களே! முஸ்லிம்களே! உங்கள் மீது அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக! உங்க ளில் முன் சென்றவர்களுக்கும் பின் செல்லவிருப்பவர்களுக்கும் அல்லாஹ் ரஹ்மத் செய்வானாக! அல்லாஹ் நாடினால் நாங்களும் உங்களோடு வந்து சேர்ந்து கொள்வோம்.
(ஸஹீஹ் முஸ்லிம் - எண் : 2254)

இவ்வாறு தெளிவான ஆதாரங்கள் இருக்கும் போது, இந்த சிறப்பான ஒரு அமலை ஆண்களுக்கு மட்டும் சொந்தமாக்கி, பெண்களைத் தடை செய்வது மாபெரும் தவறாகும்.

எனவே பெண்கள் மேலேயுள்ள ஆதாரங்களின் அடிப்படையில் மண்ணறைகளுக்குச் செல்பவர்களுக்கு இஸ்லாம் விதித்துள்ள முறைப்படிச் சென்று முஸ்லிம்களின் கப்றுகளைத் தரிசிக்கலாம்.

விதி முறைகள் :

01.

முழுமையாகத் தன்னை மறைத்து பர்தா அமைப்புடன் செல்ல வேண்டும்.

02.

மக்பராவுக்குள் நுழையுமுன் பாதணிகளைக் கழற்றி விட வேண்டும்.

03.

மேலே வந்துள்ள துஆவை ஓதிக் கொள்ள வேண்டும்.

04.

உறவினர்கள் அடக்கப்பட்ட கப்றுகளைக் கண்டால் சப்தமிட்டு அழக்கூடாது.

05.

அங்கு சென்றதும் கிப்லாவை முன்னோக்கி இரு கைகளையும் உயர்த்தி மரித்தவர்களுக்கும், தங்களுக்கும், ஏனைய முஸ்லிம்களுக்கும் பிரார்த்தனைச் செய்ய வேண்டும்.

06.

அங்கு சென்று கப்றுகளின்மீது வெளியில் உள்ள மண்ணைக் கூட்டி கப்றை உயர்த்துவது, அதில் பூக்கள் வைப்பது, மரங்கள் நட்டுவது, ஊதுவர்த்தி கொழுத்துவது, குரும்பை வெட்டி வைப்பது, யாஸீன் ஓதுவது போன்ற செயல்களை முற்றாகத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

**தொழுகை - தொடர் : 02**

# தூய்மையானவைகளும் தூய்மையற்றவைகளும்

**மலஜலம் கழித்தல் சம்பந்தப்பட்டவைகள் :**

01. மலஜல கூடத்தினுள் நுழையும் போது அல்லாஹ்வின் திருநாமம் பொதிக்கப்படட மோதிரம் கையில் இருந்தால் அதனைக் கழற்றி வைத்துவிட்டு நுழைய வேண்டும்.

“நபி (ஸல்) அவர்கள் மலஜல கூடத்தினுள் நுழையும் போது தங்கள் மோதிரத்தைக் கழற்றிவிடுவார்கள்”
(திர்மிதி - திர்மிதியும் முன்திரியும் இதனை ஸஹீஹ் என்கின்றனர்.
நைலுல் அவ்தார் 01 : 65)

02. மலஜல கூடத்தினுள் நுழையும் போது பின்வரும் துஆவை ஓத வேண்டும்.

“அல்லாஹ்வின் பெயரால் (நுழைகின்றேன்)
யாஅல்லாஹ்! (மனிதர்களிலும் ஜின்களிலும் உள்ள) கெட்ட ஆண்களிடம் இருந்தும், கெட்ட பெண்களிடம் இருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன்.”
(இதனை அல் உமரியு பதிவு செய்துள்ளார். இதன் அறிவிப்பாளர் தொடர் சரியானது. )
( பத்ஹுல் பாரி பா:01 பக் : 25 )

03. மலஜலம் கழிக்கும் போது கிப்லாவை முன்னோக்கவோ அல்லது பின்னோக்கவோ கூடாது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :
“உங்களில் ஒருவர் மலஜலம் கழிக்கச் சென்றால், கிப்லாவை முன்னோக்கவோ, அல்லது அதனை தன் முதுகுப் பின்னாலோ ஆக்க வேண்டாம்.”
( ஸஹீஹ் முஸ்லிம் : 608, ஸஹீஹுல் புகாரி )

04. தனக்கும் கிப்லாவிற்குமிடையில் ஏதாவது ஒரு மறைப்பு இருக்குமேயானல், கிப்லாவை முன்னோக்குவது தடையாகமாட்டாது.

இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :
“நான் ஒருநாள் ஹப்ஸாவின் வீட்டிற்கு மேல் ஏறினேன். அப்போது நபி (ஸல்) அவர்கள் கழிவறைக்குள் ஷாம் நாட்டை முன்னோக்கியும், கஃபாவை பின்னோக்கியும் அவர்களின் தேவையை நிறைவேற்றிக் கொண்டிருப்பதை நான் பார்த்தேன்”
( ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம் : 611 )

மேலும் அபூதாவூதில் பின்வருமாறு காணப்படுகின்றது :
இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :
“நபி (ஸல்) அவர்கள் தடுத்ததெல்லாம்ளூ மறைப்பு இல்லாத இடங்களில்தான். உனக்கும் கிப்லாவிற்குமிடையில் உன்னை மறைக்க ஒரு பொருள் இருந்தால் குற்றமில்லை”
( ஸஹீஹ் அபூதாவூத் - எண் :08, நைலுல் அவ்தார் - 1 : 73 )

05. மலஜலம் கழிக்கும் போது இரண்டு கற்கள்மீது கால்களை வைக்க வேண்டும்.

இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :
“நான் நபி (ஸல்) அவர்களை இரண்டு கற்கள்மீது இருப்பதைக் கண்டேன்”
( ஸஹீஹுல் புகாரி )

06. மலஜலம் கழிக்க வெளியில் சென்றால், மக்கள் நடமாட்டம் இலலாத தூர இடங்களுக்குச் செல்ல வேண்டும்.

முகீரா அறிவிக்கின்றார்கள் :
“நபி (ஸல்) அவர்கள் தேவைகளை நிறைவேற்றச் சென்றால், தூரமான இடத்திற்குச் செல்வார்கள்.
( அபூதாவூத் - எண் : 01 )

07. மலஜலம் கழிக்கும் போது ஏதாவது ஒன்றைக் கொண்டு

தன்னை மறைத்துக் கொள்ள வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் ஒருமுறை தன்னை மறைத்துக் கொள்ளக் கூடிய ஒன்றை (தேடியும்) காணாத போது, இரண்டு மரங்கள் வந்து அவர்களை மறைத்துக் கொண்டன.
– இது நீண்ட ஹதீஸின் சுருக்கம். –
(அறிவிப்பாளர் : ஜாபிர் ரலி, ஸஹீஹ் முஸ்லிம் )

08. கழிவிடத்திற்குச் சென்றதும் நின்றவண்ணம் ஆடையை உயர்த்தாது தரையை நெருங்கும்போது ஆடையை உயர்த்த வேண்டும்.

“நபி (ஸல்) அவர்கள் கழிவிடத்திற்குச் சென்றால் தரையை நெருங்குமுன் தங்கள் ஆடையை உயர்த்தமாட்டார்கள்” என்று இப்னு உமர் (ரலி) அறிவிக்கின்றார்கள்.
(அபூதாவூத், பைஹகி – பா : 01 பக் : 113)

“தஃலீகாத் அலல் மிஷ்காத்” என்ற நூலில் ‘இது ஸஹீஹானது’ என்று அல்பானி கூறுகின்றார்.

09. மல ஜலம் கழித்து முடிந்ததும் தண்ணீரால் துப்பரவு செய்ய வேண்டும். “நபி (ஸல்) அவர்கள் தண்ணீரால் துப்பரவு செய்பவர்களாக இருந்தார்கள்” என அனஸ் (ரலி) கூறுகின்றார்கள்.
( ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம் )

10. மலஜலத்தை துப்பரவு செய்யும் போது இடது கையினால் துப்பரவு செய்ய வேண்டும். வலது கையினை பயன்படுத்தக் கூடாது.

ஸல்மான் கூறுகின்றார்கள் :
“மலஜலம் கழிக்கும் போது கிப்லாவை முன்னோக்குவ தையும், வலது கையினால் துப்பரவு செய்வதனையும், அல்லது மூன்று கற்களுக்குக் குறைவாக துப்பரவு செய்வதனையும், அல்லது எலும்பு, விட்டைகளால் துப்பரவு செய்வதனையும் நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள்.
( ஸஹீஹ் முஸ்லிம் – எண் : 605 )

11. “கழிவறையினுள் நுழைந்தால் உங்களில் ஒருவர் தன் அபத்தை வலது கையினால் தொடவும் வேண்டாம். மேலும் வலது கையினால் துப்பரவு செய்யவும் வேண்டாம். மேலும் பாத்திரத்தில் மூச்சு விடவும் வேண்டாம்” என நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள் என அபூகதாதா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.
(ஸஹீஹ் முஸ்லிம் – எண் : 612 )

12. தண்ணீர் கிடைக்காது கற்களால் துப்பரவு செய்ய வேண்டி நேரிட்டால், ஒற்றைப்படையாகச் செய்ய வேண்டும். அதாவது மூன்று கற்களால் துப்பரவு செய்ய வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :
“உங்களில் ஒருவர் கற்களால் துப்பரவு செய்வதாயின் ஒற்றைப்படையாக துப்பரவு செய்யவும்”
( ஸஹீஹ் முஸ்லிம் அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி) )

மற்றுமொரு அறிவிப்பில் :
“உங்களில் ஒருவர் மூன்று கற்களுக்குக் குறைவாக துப்பரவு செய்ய வேண்டாம்”
(ஸஹீஹ் முஸ்லிம் – எண் : 605 அறிவிப்பவர் : அபூஹுரைரா)

13. விட்டை, எலும்புகளால் துப்பரவு செய்யக் கூடாது.

நபி (ஸல்) அவர்கள் எலும்பு, விட்டைகளால் துப்பரவு செய்வதைத் தடுத்தார்கள்.
( ஸஹீஹ் முஸ்லிம் )
(இதற்குக் காரணம் : இவைகள் ஜின்களின் உணவாக இருப்பதாகும். )

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :
நபி (ஸல்) அவர்களிடம் ஜின்களின் தூதுக் குழு ஒன்று வந்து "முஹம்மதே! விட்டை, எலும்பு, கரித்துண்டுகள் ஆகியவைகளால் (மலஜலம் கழித்துவிட்டு) துப்பரவு செய்ய வேண்டாம் என்று உங்கள் உம்மத்தினரை தடுங்கள். ஏனெனில் அல்லாஹ் அவைகளில் எங்கள் உணவை ஆக்கியிருக்கின்றான்" என்றனர். உடனே நபி (ஸல்) அவர்கள் அதை (உம்மத்தினருக்கு)தடுத்தார்கள்.
( அபூதாவூத் - எண் : 30 )

14. சிறு நீர் கழிக்கும்போது உட்கார்ந்து கழிக்க வேண்டும்.

அன்னை ஆயிஷா ஸித்தீக்கா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகின்றார்கள் :
"நபி (ஸல்) அவர்கள் உட்கார்ந்த வண்ணம் சிறுநீர் கழித்தார்கள்"
( நஸாஈ, அபூ அவானா, பத்ஹுல் பாரி 1 : 341)

15. ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்டால் மேனியில் தெரிக்காதவாறு நின்றவண்ணம் சிறுநீர் கழிப்பது கூடும்.

ஹுதைபா (ரலி) அவர்கள் கூறினார்கள் :
"ஒரு கூட்டத்தின் குப்பை மேட்டிற்கு நபி (ஸல்) அவர்கள் வந்து, நின்றவண்ணம் சிறுநீர் கழித்தார்கள். பிறகு தண்ணீர் கொண்டு வரும்படி கேட்டார்கள். நான் தண்ணீர் கொண்டு வந்தேன். உடனே வுழூச் செய்தார்கள்.
( ஸஹீஹுல் புகாரி - எண் : 224 )

16. மலஜலம் கழித்துக் கொண்டிருப்பவர்கள் தங்களுக்குள் கதைத்துக் கொண்டிருக்கக் கூடாது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :
"இரண்டு நபர்கள் வெளியாகி தங்கள் மர்மஸ்தானத்தைக் காட்டிக் கொண்டும், பேசிக் கொண்டும் இருக்கக் கூடாது. ஏனெனில் அல்லாஹ் இதன்மீது கோபப்படுகின்றான்.
(அபூதாவூத், அஹ்மத், இப்னு ஸகன்.
இப்னு ஸகன் இதனை ஸஹீஹ் என்கின்றார்.
புலூகுல் அமானி)

17. ஒருவர் சிறுநீர் கழித்துக் கொண்டிருக்கும் போது அவருக்கு ஸலாம் சொல்வதைத் தவிர்க்க வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் சிறுநீர் கழித்துக் கொண்டிருக்கும்போது, ஒரு மனிதர் அவர் அருகில் நடந்து செல்லும் போது ஸலாம் சொன்னார். (அதற்கு) நபி (ஸல்) அவர்கள் அவருக்கு பதில் கூறவில்லை.
( ஸஹீஹ் முஸ்லிம் - எண் : 821 )

08. மக்கள் நடமாடும் பாதைகள், நிழல் தரும் மரங்கள் ஆகியற்றின் கீழ் மலஜலம் கழிப்பதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் அது மக்களின் சாபத்திற்கு வழிவகுக்கும்.

"சாபத்திற்கு ஆளாகும் இரண்டு மனிதர்களைப் பயந்து கொள்ளுங்கள்" என நபி (ஸல்) அவர்கள் கூற, "அவ்விருவரும் யார்? யாரஸூலுல்லாஹ்!" என (தோழர்கள்) கேட்க, "ஒருவர் மக்கள் (நடமாடும்) பாதையில் மலம் கழிப்பவர். அல்லது (மற்றவர்) மக்களின்

நிழல்களில் மலம் கழிப்பவர்'' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அறிவிப்பவர் : அபூஹுரைரா
ஆதாரம் : ஸஹீஹ் முஸ்லிம் - எண் : 617)

19. பொந்துகளுக்குள் சிறுநீர் கழிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

இதற்கான காரணம் - பொந்துகளுக்குள் வசிக்கும் ஜின்கள் அவருக்கு ஏதும் தீங்குகளை செய்துவிடும் என்பதா? அல்லது அதில் வசிக்கும் உயிரினங்களுக்கு ஏதும் நோவினைகள் ஏற்படும் என்பதா? காரணம் என்னவென்று ஹதீஸ்களில் காணப்படவில்லை.ஈ

“பொந்துகளுக்குள் சிறு நீர் கழிப்பதை நபி (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள்'' என்று அப்துல்லாஹ் அறிவித்ததாக கதாதா கூறினார்கள். அப்போது கதாதா அவர்களிடம் “தடைக்கு என்ன காரணம்?'' என்று கேட்க, “அது ஜின்களின் வசிப்பிடம் என்று சொல்லப்படுகின்றது'' என்று கூறினார்கள்.
(அஹ்மத், அபூதாவூத், நஸாஈ - தரம் : ஸஹீஹ்
நைலுல் அவ்தார் - 1 : 74)
குறிப்பு : ‘ஜின்களின் வசிப்பிடம்’ என்ற வாசகம் கதாதா என்ற தாபிஈயின் வாசகமாகும். அது ஹதீஸ் அல்ல.

20. ஒரு இடத்தில் ஓடாது, தேங்கிக் கிடக்கும் நீரில் சிறுநீர் கழிக்கக் கூடாது.

“தேங்கிக் கிடக்கும் நீரில் சிறுநீர் கழிப்பதை நபி (ஸல்)
அவர்கள் தடுத்தார்கள்.
( அறிவிப்பவர் : ஜாபிர் (ரலி) அவர்கள், ஆதாரம் : ஸஹீஹ் முஸ்லிம்,
அல்ஜாமிஉஸ் ஸகீர் எண் : 6814)

21. குளியலறையில் சிறுநீர் கழித்துவிட்டு அதே இடத்தில் குளிப்பது தடுக்கப்பட்ட விடயமாகும்.

“நிச்சயமாக உங்களில் ஒருவர் தன் குளியலறையில் சிறு நீர் கழித்து விட்டு, பிறகு அதிலேயே குளிக்க வேண்டாம்'' என நபி ந அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் : அப்துல்லாஹ்
(ஆதாரம் : ஸஹீஹ் அபூதாவூத் - எண் : 22, நஸாஈ)

22. சிறுநீர் கழிக்கும்போது தன் ஆடை, தன் மேனியில் தெரிக்காத முறையில் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். காரணம் இதில் பேணுதல் இல்லாதவர்கள் மண்ணறையில் வேதனை செய்யப்படுவார்கள்.

இப்னு அப்பாஸ் வ அவர்கள் கூறுகின்றார்கள் :
(ஒருநாள்) நபி ந அவர்கள் இரண்டு மண்ணறைகளின் அருகில் நடந்து சென்றார்கள். அப்போது க்ஷக்ஷநிச்சயமாக இவ்விரு வரும் வேதனை செய்யப்படுகிறார்கள்஼ இவ்விருவரும் வேறு பெரும் பாவத்திற்காக வேதனை செய்யப்படவில்லை஼ இது பெரும் பாவமாகும். அவ்விருவரில் ஒருவர் கோள் சொல்லித் திரிந்துள் ளார்஼ மற்றவர் தன் சிறுநீர் விடயத்தில் (தன் மேல் தெரிப்பதி லிருந்து) தவிர்ந்து கொள்பவராக இருக்கவில்லை● ● என்று கூறி விட்டு, பேரீத்த மரத்தின் பச்சை ஓலை ஒன்றை கொண்டு வரும்படி கூறினார்கள். பிறகு அதை இரண்டாகக் கிழித்து, ஒன்றை ஒரு கப்ரின் மீதும் மற்றொன்றை ஒரு கப்ரின் மீதும் நாட்டி விட்டு, க்ஷக்ஷஇது காயாமல் இருக்கும்வரை அவ்விருவருக்கும் (வேதனை) குறைக் கப்படலாம்● ● என்று கூறினார்கள்.
( ஸஹீஹுல் புகாரி : 218, ஸஹீஹ் முஸ்லிம் : 675 )

23. பாத்திரங்களில் சிறுநீர் கழித்து வீடுகளில் வைத்திருக்கக் கூடாது. அவசரமாக அதை வீட்டிலிருந்து அகற்றி விட வேண்டும்.

“வீட்டில் பாத்திரத்தினுள் சிறுநீர் சேர்த்து வைக்கப்படக் கூடாது. ஏனெனில் சிறுநீர் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் வீட்டில் மலக்குகள் நுழையமாட்டார்கள்” என நபி (ஸல்) அவர்கள் கூறி னார்கள்.
(அத்தபரானி பில் அவ்ஸத் - தரம் : ஹஸன்
மஜ்மஉஸ் ஸவாயித் 1 : 304)

24. வுழூச் செய்யும் பாத்திரத்தை வேறு தேவைகளுக்கு பயன்படுத்தக் கூடாது. வுழூச் செய்வதற்கென தனியாக பாத்திரமும், துப்பரவு செய்வதற்கு வேறு பாத்திரங்களும் பயன்படுத்த வேண்டும்.

“நபி (ஸல்) அவர்கள் கழிவறைக்குச் சென்றால், ஒரு பாத்திரத்தில் தண்ணீர் எடுத்துச் செல்வேன். அதைக் கொண்டு துப்பரவு செய்வார்கள். பிறகு வேறொரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வருவேன். அதில் வுழூச் செய்வார்கள்”என அபூஹுரைரா அறிவிக்கின்றார்கள். ( இதன் தரம் : ஹஸன், அத்:.லீகாத் 1 : 360 )

25. மலஜல கூடத்திலிருந்து வெளியேறும்போது “ غُفْرَانَكَ” “குப்ரானக” என்று ஓத வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் மலஜல கூடத்திலிருந்து வெளியேறும் போது “غُفْرَانَكَ” (நான் உன்னிடத்தில் மன்னிப்பைக் கோருகின் றேன்) என்று கூறுபவர்களாக இருந்தார்கள்.
(ஸஹீஹ் இப்னு மாஜா - எண் : 244)

26. ஒருவர் மலஜலம் கழித்து விட்டு தன் கையை தண்ணீரால் துப்பரவு செய்த பின், கையை தரையில் அடித்து நன்கு தேய்த்துக் கழுவிக் கொள்ள வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் கழிவறைக்கு வந்தால், நான் தண்ணீர்கொண்டு வருவேன்.........
பிறகு தங்கள் கையை தரையில் அடித்துத் தேய்ப்பார்கள்.
( அபூதாவூத், அத்த:.லீகாத் - 1 பக்:116 தரம் : ஹஸன் )

குறிப்பு :
மார்க்கம் என்பது அல்லாஹ்வினால் தரப்பட்டதாகும். மார்க்க விடயங்களுக்கு குர்ஆன் ஸுன்னாவிலிருந்து ஆதாரங்கள் முன்வைக்கப்பட வேண்டும். ஆதாரமற்றவைகள் அல்லது பலயீனமான ஹதீஸ்கள் மார்க்கமாகாது. சில விடயங்களை மக்கள் மார்க்கம் என்று செய்து வருகின்றார்கள். அவைகளிலிருந்து ஒரு முஸ்லிம் தவிர்ந்து கொள்ள வேண்டும்.
மலஜலம் கழிக்கும் விடயத்தில் புதிதாகப் புகுத்தப்பட்ட, ஆதாரமற்ற பின்வரும் சில விடயங்களை மார்க்கமாக நாம் கருதக் கூடாது. சிலர் இவைகளை மார்க்கமாக கருதிய போதிலும் சரியே!

அவையாவன :
01. மலஜலம் கழிக்கும் போது தலை மூடியிருக்க வேண்டும்.
02. உள்ளே நுழையும் போது இடது காலை முற்படுத்த வேண்டும்.
03. வெளியேறும் போது வலது காலை முற்படுத்த வேண்டும்.
04. உள்ளே இடது காலில் சாய்ந்திருக்க வேண்டும்.
05. மலஜலம் கழிக்கும் போது துப்பக்கூடாது.

நாங்கள் அறிந்தவரை இவைகளுக்கு ஸஹீஹான ஆதாரங்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவைகளுக்கு ஸஹீஹான ஆதாரங்கள் காணப்பட்டால், தயவு செய்து எங்களுக்கு அறியத்தரவும். இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் திருத்திக் கொள்வோம்.

**( இன்ஷா அல்லாஹ் தொடரும்)**

## ஸஹீஹான ஹதீஸ் ஒன்று

"இரண்டு நபர்கள் (இருக்கின்றார்கள்) அவர்களின் தொழுகை அவர்களின் தலைகளைத் தாண்டி (மேலேறி)ச் செல்லாது.
ஒருவர், தன் தலைவரிடமிருந்து பாய்ந்தோடிச் சென்ற அடிமை - திரும்பி வரும்வரை
இரண்டாம் நபர் தன் கணவருக்கு மாறு செய்த பெண், அதிலிருந்து திரும்பும் வரை" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

## லயீப் - பலயீனமான ஹதீஸ் ஒன்று

"பச்சிளங் குழந்தைகளிலிருந்து வீசும் வாடை சுவனத்தின் வாடையாகும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(தபரானி, இப்னு ஹிப்பான் ஸில்ஸிலதுல் அஹாதீஸுல் லயீபா வல்மவ:ழூஆ எண் : 2499)

இது பலயீனமா ஹதீஸாகும். இதன் அறிவிப்பாளர் தொடரில் இப்னு அலி அல் அனஸி என்பவர் காணப்படுகின்றார். இவர் பலயீனமானவர் என்று இப்னு ஹஜர் தனது தர்ஹீப் என்று நூலில் குறிப்பிடுகின்றார்.

## மவ்லூ:. - இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ் ஒன்று

அல்லாஹ் தௌஹீத் வாதிகளை நரகில் நுழைத்து விட்டால், அதில் அவர்களை மரணிக்கச் செய்து விடுவான். பின்னர் அவர்களை வெளியேற்ற நினைக்கும் போது, அந்த நேரத்தில் மட்டும் தண்டனையின் வலியை மட்டும் உணர வைப்பான்.

(தய்லமி - அபூபக்கர் கலாபாதீ அல்அஹாதீதுல் லயீபா வல் மவ்லூஆ - எண் : 2028)

“இது இட்டுக்கட்டப்பட்ட மவ்லூஆன செய்தி. இதன் அறிவிப்பாளர் தொடரில் அல் அதலி என்பவர் காணப்படுகின்றார். இவர் செய்திகளை இட்டுக்கட்டுவதில் பிரபல்யமானவர்” என்று இமாம் சுயூதி கூறுகின்றார்.